Let the mind manage the body
Que l'esprit gère le corps

**TAMIL**
**(Subject code No. P170)**

**Index Number:** ..............................................................................................................

# MAURITIUS EXAMINATIONS SYNDICATE

## Primary School Achievement Certificate Assessment 2024

**Time: 1 hour 45 minutes** **Total Marks: 100**

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Check that this assessment booklet contains **9** questions printed on **16** pages.
2. Write your Index Number on the assessment booklet in the space provided above
3. You should not use red, green or black ink in answering questions.
4. Write all your answers clearly in the assessment booklet.
5. Attempt **all** questions.

| Question | Marking | | | Revision | | | Control | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Marks | | Sig | Marks | | Sig | Marks | | Sig |
| 1A | | | | | | | | | |
| 1B | | | | | | | | | |
| 2A | | | | | | | | | |
| 2B | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4A | | | | | | | | | |
| 4B | | | | | | | | | |
| 5A | | | | | | | | | |
| 5B | | | | | | | | | |
| 6 | | | | | | | | | |
| 7A | | | | | | | | | |
| 7B | | | | | | | | | |
| 8 | | | | | | | | | |
| 9 | | | | | | | | | |
| **Total** | | | | | | | | | |
| **Sig (HoG)** | | | | | | | | | |

© Mauritius Examinations Syndicate

**BLANK PAGE**

Marks

**Question 1 A (5 marks)**

**ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுது.**



மேசை
______________________



______________________



______________________



______________________



______________________



______________________

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**Question 1 B (5 marks)**

**கீழ்க்காணும் தொடர்களைச் சரியான படத்தோடு இணை.**

அப்பா சந்தையில் இருக்கிறார்.

நாய் தெருவில் நடக்கிறது.

என் தங்கை ஒரு நூலைப் படிக்கிறாள்.

அன்பன் ஒரு ரொட்டியைச் சாப்பிடுகிறான்.

பெண்கள் விளையாடுகிறார்கள்.

மரத்தில் பல பழங்கள் இருக்கின்றன.













| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

## Question 2 A (10 marks)

**கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

(எ - டு) அது ஒரு ............................... .

அ. பூக்கள் (ஆ.) பூ

இ. பூவில் ஈ. பூவை

........................................................................................

க. .......................... நல்ல நண்பர்கள்.

அ. அவன் ஆ. அவள்

இ. அவர்கள் ஈ. அவர்

உ. நேற்று நீ .......................... போனாய்?

அ. எங்கே ஆ. எத்தனை

இ. என்ன ஈ. எந்த

ங. நானும் நீயும் வேலை .......................... .

அ. செய்வேன் ஆ. செய்வோம்

இ. செய்வாய் ஈ. செய்வார்கள்

ச. அம்மா.......................... உணவு சமைத்தார்.

அ. சுவையாய் ஆ. சுவை

இ. சுவையாக ஈ. சுவையான

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

ரு. .......................... அந்த வீடு பிடிக்கும்.

அ. மாமன் ஆ. மாமனின்

இ. மாமனுக்கு ஈ. மாமனால்

சா. அக்கா .......................... வேலைக்குப் போனார்.

அ. குளி ஆ. குளித்து

இ. குளித்த ஈ. குளித்தார்

எ. வேலன்.......................... பேனா நீல நிறம்.

அ. எடுத்த ஆ. எடுத்தால்

இ. எடுத்து ஈ. எடு

அ. வண்டிக்காரன் வண்டியை .......................... ஓட்டினான்.

அ. வேகம் ஆ. வேகமான

இ. வேகமானது ஈ. வேகமாக

கூ. அடுத்த வாரம் அப்பா ஒரு பரிசு ........................ .

அ. வாங்குகிறார் ஆ. வாங்கினார்

இ. வாங்குகிறான் ஈ. வாங்குவார்

க0. அத்தை.......................... காய்களை வெட்டுகிறார்.

அ. கத்திக்குக் ஆ. கத்தியின்

இ. கத்தியால் ஈ. கத்தியைக்

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**Question 2 B (5 marks)**

**கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. என் தங்கைக்குக் காயம் ஏற்பட்டது. அவள் ....................

அ. அழுதாள் ஆ. எழுதினாள்

இ. படித்தாள் ஈ. சாப்பிட்டாள்

உ. உன் .................... எடு; மழை பெய்கிறது.

அ. பேனாவை ஆ. குடையை

இ. குவளையை ஈ. நூலை

ங. நான் தேர்வில் தேறி வந்தேன்; நான் .................... இருக்கிறேன்.

அ. மகிழ்ச்சியாய் ஆ. கோபமாய்

இ. பயமாய் ஈ பசியாய்

ச. என் தம்பி வியாதியாய் இருக்கிறான்; அவன் .................... போய்ப் பார்க்கிறான்.

அ. காவற்காரரைப் ஆ. ஆசிரியரைப்

இ. மருத்துவரைப் ஈ. தோட்டக்காரரைப்

ரு. விடுமுறையில் நாங்கள் ஒரு தமிழ்ப் படத்தைப் .................... .

அ. ஓடினோம் ஆ. சமைத்தோம்

இ. கழுவினோம் ஈ. பார்த்தோம்

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

**Question 3 (10 marks)**

**கீழ்க்காணும் விளம்பரத்தைக் கவனமாகப் படி.**

**திருவள்ளுவர் அரசாங்கப் பள்ளி நடத்தும் சிறுகதைப் போட்டி**

திருவள்ளுவர் அரசாங்கப் பள்ளி ஒரு சிறுகதைப் போட்டியை நடத்துகிறது.
ஆறாம் தர மாணவர்கள் எல்லாரும் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும்.
அவர்கள் எழுத வேண்டிய தலைப்புகள்:

**க. என் குடும்பம்**

அல்லது

**உ. என் பூனை**

**தேதி :** மே மாதம், வெள்ளிக்கிழமை 10ஆம் தேதி, 2024

**நேரம்:** பத்து மணிக்குத் தொடங்கிப் பதினொன்று மணி வரை

**இடம்:** பள்ளி மண்டபம்

**முதல் பரிசு :** உ000 ரூபாய்

**இரண்டாம் பரிசு:** கரு00 ரூபாய்

**மூன்றாம் பரிசு :** க000 ரூபாய்



போட்டியில் மாணவர்கள் பங்குகொள்ள விரும்பினால் ஆசிரியை, திருவாட்டி முத்து என்பவருக்குத் தங்கள் பெயர்களைக் கொடுக்க வேண்டும்.

**கடைசி நாள்:** ஏப்ரில் மாதம் 30ஆம் தேதி வரை பெயர்களைக் கொடுக்க வேண்டும்.





Marks

**கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை எழுது.**

க. எந்தப் பள்ளி போட்டியை நடத்துகிறது? [1]

.....................................................................

உ. பள்ளி எந்தப் போட்டி நடத்துகிறது? [1]

.....................................................................

ங. யார் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும்? [1]

.....................................................................

ச. மாணவர்கள் எந்த ஒரு தலைப்பை ஒட்டி எழுதலாம்? [1]

.....................................................................

ரு. போட்டி எந்தத் தேதி நடைபெறும்? [1]

.....................................................................

சூ. போட்டி எத்தனை மணிக்குத் தொடங்கும்? [1]

.....................................................................

எ. போட்டி எந்த இடத்தில் நடைபெறும்? [1]

.....................................................................

அ. முதல் பரிசுக்கு எத்தனை ரூபாய் கிடைக்கும்? [1]

.....................................................................

கூ. மாணவர்கள் யாருக்குத் தங்கள் பெயர்களைக் கொடுக்க வேண்டும்? [1]

.....................................................................

க0. பெயர்களைக் கொடுக்க, கடைசி நாள் எது? [1]

.....................................................................

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**Question 4 (15 marks)**

**தந்துள்ள பகுதியைக் கவனமாகப் படி.**

திரு ஐயர் 'சுயாக்' என்னும் ஊரில் வாழ்கிறார். ஒரு நாள் அவர் ஒரு மாம்பழத்தைத் தம் வேலைக்காரன், செல்வனுக்குக் கொடுத்தார். "செல்வன், இந்த மாம்பழத்தை வெட்ட வேண்டும். என் நண்பன், திரு கண்ணன் வருவான். அவன் அதைச் சாப்பிட வேண்டும்," என்றார் திரு ஐயர்.



செல்வன் மாம்பழத்தை வெட்டிய பிறகு ஒரு துண்டு சாப்பிட்டான். அது இனிப்பாக இருந்தது. ஆகவே, அவன் அந்த மாம்பழத்தைச் சாப்பிட்டான்.

திடீரென்று திரு ஐயர் செல்வனைக் கூப்பிட்டு, "மாம்பழத்தைக் கொண்டுவா," என்று சொன்னார். செல்வனுக்குப் பயம் ஏற்பட்டது. ஏனென்றால் திரு ஐயர் கோபமாய் இருப்பார் என்று நினைத்தான். அவன் என்ன செய்வான்?

திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை வந்தது. "ஐயா, கத்தி மிகவும் சிறியது. என்னால் மாம்பழத்தை வெட்ட முடியவில்லை," என்று செல்வன் சொன்னான்.

"காத்திரு! நான் சமையல் அறைக்குப் போய் ஒரு பெரிய கத்தியை எடுத்து வருகிறேன்," என்று திரு ஐயர் கூறினார்.

அதே நேரத்தில், திரு கண்ணன் வந்துகொண்டிருந்தான் என்று செல்வன் பார்த்தான். செல்வன் அவனைப் போய்ச் சந்தித்து, "திரு ஐயர் மிகவும் கோபமாய் இருக்கிறார். அவர் ஒரு கத்தியோடு உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்," என்று திரு கண்ணனிடம் சொன்னான்.

'நேற்று, அவர் என் வீட்டுக்கு வந்தபோது, நான் அவருடைய செருப்புகளை அணிந்தேன். அவர் மிகவும் கோபமாய் இருப்பார் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் காவற்காரரைக் கூப்பிடும் முன் நான் ஓடிப் போவேன்,' என்று திரு கண்ணன் நினைத்தான்.

செல்வன் திரு ஐயரைப் போய்ப் பார்த்து, “ஐயா, உங்களுடைய நண்பன் மாம்பழத்தை எடுத்து ஓடிப் போய்விட்டான்,” என்று சொன்னான்.

திரு ஐயர் வீட்டுக்கு வெளியே வந்தார். தம் நண்பன் ஓடிப் போய்க்கொண்டிருந்ததைப் பார்த்தார். “ஓட வேண்டாம்! ஓட வேண்டாம்!” என்று அவர் உரக்கச் சொன்னார். திரு ஐயர் ஒரு பெரிய கத்தியோடு அவனுக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறார் என்று திரு கண்ணன் கவனித்தான். அவன் உரக்கக் கத்தி மிகவும் வேகமாக ஓடினான்.

திரு ஐயர் வீட்டில் நுழைந்தார். அவர் செல்வனைக் கூப்பிட்டு, “கண்ணன் ஒரு திருடன் என்று எனக்குத் தெரியவில்லை,” என்று சொன்னார்.

**Question 4 A (5 marks)**

**அ. ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் சரியானது. அச்சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. செல்வன் மாம்பழத்தை ........................ வேண்டும் என்று திரு ஐயர் விரும்பினார்.

அ. சாப்பிட　　　ஆ. மறைக்க

இ. வெட்ட　　　ஈ. எரிய

உ. செல்வன் மாம்பழத்தைச் சாப்பிட்ட பிறகு, அவன் பயமாய் இருந்தான். ஏனென்றால் ............................ .

அ. திரு ஐயரிடம் ஒரு கத்தி இருந்தது

ஆ. திரு கண்ணனுக்குப் பசி

இ. திரு கண்ணன் வந்துகொண்டிருக்கிறான்

ஈ. திரு ஐயர் கோபமாய் இருப்பார்

Marks

ங. திரு ஐயர் ....................... போய் ஒரு கத்தியை எடுத்து வந்தார்.

அ. படுக்கை அறைக்குப் ஆ. தோட்டத்துக்குப்

இ. சமையல் அறைக்குப் ஈ. ஊருக்குப்

ச. திரு கண்ணன் ஓடிப் போனான். ஏனென்றால் ........................ .

அ. செல்வனுக்குப் பயம் ஏற்பட்டது

ஆ. செல்வன் மாம்பழத்தை வெட்டினான்

இ. திரு ஐயருடைய கையில் ஒரு கத்தி இருந்தது

ஈ. திரு ஐயர் தம் செருப்புகளை அணிந்தார்

ரு. செல்வன் ......................... .

அ. கெட்டிக்காரன் ஆ. நல்லவன்

இ. உண்மை பேசியவன் ஈ. அமைதி உள்ளவன்

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

## Question 4 B (10 marks)

**ஆ. கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை எழுது.**

க. திரு ஐயர் எந்த ஊரில் வசிக்கிறார்? [1]

...................................................................................

உ. செல்வன் ஏன் மாம்பழத்தை வெட்ட வேண்டும்? [1]

...................................................................................

ங. மாம்பழத்தின் சுவை என்ன? [1]

...................................................................................

Marks

ச. மாம்பழத்தை வெட்ட முடியவில்லை என்று செல்வன் திரு ஐயரிடம் சொன்னான்.

(i) செல்வன் ஏன் இப்படிச் சொன்னான்? [1]

………………………………………………………………………….

(ii) திரு ஐயர் என்ன சொன்னார்? [1]

………………………………………………………………………….

ரு. திரு ஐயர் அவனோடு கோபமாய் இருந்தார் என்று திரு கண்ணன் ஏன் நினைத்தான்? [1]

………………………………………………………………………….

………………………………………………………………………….

சூ. கடைசியில் திரு ஐயர் கண்ணனைப் பற்றி என்ன சொன்னார்? [1]

………………………………………………………………………….

எ. **கதையின் அடிப்படையில் கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை ஒழுங்காக எழுது. பொருத்தமான எண்ணைக் கட்டத்தில் எழுது. ஓர் எடுத்துக்காட்டு கொடுக்கப்பட்டது.** [3]

| | | |
|---|---|---|
| அ. | செல்வன் பயமாய் இருந்தான். | ☐ |
| ஆ. | திரு கண்ணன் ஓடிப் போனான் என்று செல்வன் திரு ஐயரிடம் சொன்னான். | ☐ |
| இ. | செல்வன் மாம்பழத்தைச் சாப்பிட்டான். | 1 |
| ஈ. | செல்வன் திரு கண்ணனைப் பார்த்தான். | ☐ |

M | R | HG | QC | CE

Marks

**Question 5 A (4 marks)**

**(அ) கீழ்க்காணும் சொற்றொடர்களில் உள்ள சொற்களை ஒழுங்காக எழுது.**

க. தன் கழுவினான் நேற்று அமுதன் பைகளைக்

……………………………………………………………………………

……………………………………………………………………………

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

உ. பல பொருட்களை கடையில் மக்கள் அந்தக் வாங்குகிறார்கள்

……………………………………………………………………………

……………………………………………………………………………

**Question 5 B (6 marks)**

**(ஆ) கீழ்க்காணும் தொடர்களை முடிக்க.**

க. அண்ணன் ஒரு ரொட்டியைச் சாப்பிட்ட பிறகு

……………………………………………………………………………

……………………………………………………………………………

உ. அறைக்கு நடுவில்

……………………………………………………………………………

……………………………………………………………………………

ங. இன்றைக்கு என் பிறந்தநாள். அதனால் அப்பா

……………………………………………………………………………

……………………………………………………………………………

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**Question 6 (10 marks)**

**கீழ்வரும் கட்டத்தில் பத்துச் சொற்கள் தரப்பட்டுள்ளன. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பகுதியில் உள்ள கோடிட்ட இடத்தில் எழுது. ஒவ்வொரு சொல்லையும் ஒரு முறை மட்டும் பயன்படுத்த வேண்டும்.**

| | | | | |
|---|---|---|---|---|
| **பிறகு** | **கதையைச்** | **மணி** | **என்னை** | **ஆசிரியர்** |
| **ஒன்பது** | **முதல்** | **விளையாடுகிறார்கள்** | **பிடிக்கிறது** | **அழகான** |

என் பெயர் அமுதா. எனக்கு வயது ஐந்து. இன்றைக்கு என் பள்ளி ............................ நாள். பள்ளியில் ஓர் ............................ தோட்டம் இருக்கிறது. மாணவர்கள் அங்கே ............................ . ஓர் ஆசிரியர் ............................ வகுப்புக்குக் கூட்டிப் போகிறார். மணி ............................ . பள்ளி ............................ அடிக்கிறது. வகுப்பு தொடங்குகிறது. ............................ நமக்குப் புதிய நூல்களைக் கொடுக்கிறார். அவர் ஓர் அழகான ........................... சொல்கிறார். எங்களுக்கு அந்தக் கதை ............................ . பகல் உணவுக்குப் ............................ நாங்கள் வீட்டுக்குத் திரும்புகிறோம். நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

| M |
|---|
| R |
| HG |
| QC |
| CE |



Please turn over this page

Marks

**Question 7 A (5 marks)**

**(அ) அடிக்கோடுள்ள சொற்களில் பிழைகள் உள்ளன. அவற்றைத் திருத்திக் கோடுள்ள இடத்தில் எழுது.**

க. **கலையில்** ...................................... அவர்கள் கடற்கரைக்குப் போனார்கள்.

உ சுவரில் பல **படம்** ...................................... இருக்கின்றன.

ங. நீ **எவ்வளவு** ...................................... மிட்டாய்களைக் கொடுத்தாய்?

ச. நாங்கள் விழாவுக்கு வர **வேன்டும்** ...................................... .

ரு. மாணவி **பல்லிக்குச்** ...................................... சென்றாள்.

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

**Question 7 B (5 marks)**

**(ஆ) வளைக்கோட்டில் உள்ள சொல்லைத் திருத்திக் கோடுள்ள இடத்தில் எழுது.**

க. அவர்கள் ...................................... நீரில் விளையாடுகிறார்கள். (ஆறு)

உ அது ஒரு ...................................... அறை. (சுத்தம்)

ங. பறவை ...................................... பறக்கிறது. (உயரம்)

ச. வணிகன் பணத்தை ...................................... அம்மாவுக்குக் கொடுத்தான். (எண்ணு)

ரு. அரசி ...................................... கறியில் உப்பு இல்லை. (சமை)

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**Question 8 (10 marks)**

**கீழ்க்காணும் ஒவ்வொரு படத்துக்கும் சொற்கள் தரப்பட்டுள்ளன. ஒரு <u>கதையை அமைக்க,</u> அச்சொற்களைக் கொண்டு சொற்றொடர்களை அமைத்து எழுது.**



காலையில் - எழு

.......................................................

.......................................................



பிறகு - பல் தேய்

.......................................................

.......................................................



சமையல் அறை - சாப்பிடு

.......................................................

.......................................................



வேகமாக - அணி

.......................................................

.......................................................



கடைசியில் - புறப்படு

.......................................................

.......................................................

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |



Please turn over this page

Marks

**Question 9 (10 marks)**

**தந்துள்ள குறிப்புகளைக் கொண்டு 10 வரிகள் அளவில் ஒரு கதையை எழுது.**

- மாணவர்கள் சுற்றுலாப் பயணத்துக்குப் போதல்
- பள்ளியைத் தாமதமாக அடை - ஏன்?
- பள்ளிப் பேருந்து போய்விட்டது
- கடைசியில் என்ன நடந்தது?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

| |
|---|
| M |
| R |
| HG |
| QC |
| CE |

Marks

**BLANK PAGE**